# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012 (செப்ரம்பர்/ஒக்டோபர் 2014)

## TLS 3203 தெரிவுசெய்யப்பட்ட நூல்கள் III(கி.பி.9ம் நூற்றாண்டு வரை)

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

---

01. பின்வரும் செய்யுள்களின்
    (i) பொருளைத் தெளிவாகத் தருக.
    (ii) அடிக்கோடிட்ட பகுதிகளின் நயத்தைக் காண்க.

(அ)
களிறு கதவு எறியா, சிவந்து உராஅய்
நுதி மழுங்கிய வெண் கோட்டான்
உயிர் உண்ணும் கூற்றுப் போன்றன;
நீயே, அலங்கு உளைப் பரீஇ இவுளிப்
பொலந் தேர்மிசைப் பொலிவு தோன்றி,
<u>மாக்கடல் சிவந்து எழுதரும்</u>
<u>செஞ் ஞாயிற்றுக் கவினை மாதோ</u>
<u>அனையை ஆகன்மாறே</u>
<u>தாய் இல் தூவாக் குழவி போல</u>
<u>ஓவாது கூஉம், நின் உடற்றியோர் நாடே.</u>

(07 புள்ளிகள்)

(ஆ)
வேரல் வேலி வேர்க் கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யார் அஃது அறிந்திசினோரே – சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள்
உயிர்தவச் சிறிது; காமமோ பெரிதே

(06 புள்ளிகள்)

(இ)
மறையின் மணந்தாரை வன்பரதர்
பாக்கத்து மடவார் செங்கை
இறை வளைகள் தூற்றுவதை ஏழையம்
எங்ஙனம் - யாங்கு அறிகோம்? ஐய!
<u>நிறைமதியும் மீனும் என அன்னம்</u>
<u>நீள் புன்னை அரும்பிப் பூத்த</u>
<u>பொளைமலி பூங் கொம்பு ஏற வண்டு ஆம்பல்</u>
<u>ஊதும் புகாரே எம் ஊர்.</u>

(06 புள்ளிகள்)

(ஈ) <u>பணியுமாம் என்றும் பெருமை</u> சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
<u>அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு</u>

(06 புள்ளிகள்)
(25 புள்ளிகள்)

02. "புறநானூற்றுப் பாடல்கள் சங்ககால மன்னர்களின் வீரச் சிறப்புக்களை மட்டுமன்றி அக்காலப் போரின் அவலங்களையும் வெளிப்படுத்துகின்றன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை உமக்குத் தரப்பட்ட பாடல் பகுதியை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(25 புள்ளிகள்)

03. உமக்குத் தரப்பட்டுள்ள குறுந்தொகைப் பாடல்களில் காதல் ஒழுக்கத்தைச் சிறப்பாகச் சித்திரிப்பதற்கு முதல், கருப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ள முறை பற்றி விபரிக்குக.

(25 புள்ளிகள்)

04. (அ) கலம்பக இலக்கணத்தைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(ஆ) நந்திக் கலம்பகத்தில் நந்திவர்மனின் புகழ் பண்டைத் தமிழ் இலக்கிய மரபுகளின்வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுக.

(20 புள்ளிகள்)

05. "பெரியாழ்வாரின் திருமொழிப் பாடல்களிலே 'தாய்மை உணர்வுடன் கூடிய பக்தியுணர்வுப் புலப்பாட்டினைக்' காணமுடிகிறது" ஆராய்க.

(25 புள்ளிகள்)

06. அரசனுக்குரிய குணவியல்புகள் குறித்து வள்ளுவர் கூறுவனவற்றை திருக்குறள் பொருட்பாலின் பொருத்தமான அதிகாரங்களைத் துணைக்கொண்டு விளக்குக,

(25 புள்ளிகள்)

*****